| நம்மையும் நாட்டு மக்களையும் காப்போம் | தொற்றிலிருந்து தமிழகத்தை மீட்போம் |
|---|---|

செ.வெ.எண் :02 நாள்:26.08.2021

## *திருப்பூர் மாநகராட்சி*
## *நகர்ப்புற ஆரம்ப சுகாதார நிலையத்தில் வெள்ளிக்கிழமை தோறும் கர்பிணி தாய்மார்கள் நகர சுகாதார செவிலியரிடம் உங்கள் கர்ப்ப விபரத்தை பதிவு செய்து டாக்டர் முத்துலட்சுமி ரெட்டி மகப்பேறு நிதியுதவி திட்டதின் கீழ் பயன்பெறலாம்.*
## *மாநகராட்சி ஆணையாளர்*
## *திரு. கிராந்தி குமார் பாடி இ.ஆ.ப., அவர்கள் தகவல்*

---

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைக்கிணங்க , ஏழை எளியோர், பெண்கள், முதியவர்கள் என அனைவரும் பயன் பெறும் வகையில் பல்வேறு திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

அதன்படி, திருப்பூர் மாநகராட்சி பகுதிகளில் உள்ள நகர்ப்புற ஆரம்ப சுகாதார நிலையத்தில் பிரதி வாரம் வெள்ளிக்கிழமை தோறும் நகர சுகாதார செவிலியரிடம் கர்பிணி தாய்மார்கள் கர்ப்ப விபரத்தை பதிவு செய்து டாக்டர் முத்துலட்சுமி ரெட்டி மகப்பேறு நிதியுதவி திட்டதின் கீழ் பயன்பெற நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

நகர சுகாதார செவிலியரிடம் உங்கள் ஆதார் எண், உங்கள் கணவரது ஆதார் எண், வங்கி கணக்கு விபரங்கள், தொலைபேசி எண் உள்ளிட்ட விபரங்கள் வழங்கி கர்ப்பப் பதிவு எண் (RCH ID எண்) பெற வேண்டும்.

இத்திட்டத்தில் பதிவு பெறும் கர்பிணி தாய்மார்கள் ரூபாய் 18000/– (ரூ.14,000/– + ரூ.4000/– மதிப்புள்ள சத்து பெட்டகம்) பெற்றுப் பயன்பெறலாம்.

---

செய்தி வெளியீடு: மக்கள் தொடர்பு அலுவலர், திருப்பூர் மாநகராட்சி

| முககவசம் அணிவீர் | தனிமனித இடைவெளியை கடைபிடிப்போம் |
|---|---|